**நாமக்கல் - டிரினிடி மகளிர் கல்லூரியில் இணைய வழி குற்றத்தடுப்பு என்ற தலைப்பிலான கருத்தரங்கு**

நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்டம் மற்றும் டிரினிடி மகளிர் மன்றம் ஆகிய அமைப்புகளின் சார்பில் "மகளிர்க்கு எதிரான இணையவழி குற்றத்தடுப்பு" என்ற தலைப்பிலான கருத்தரங்கு 02.02.2023 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு கல்லூரி செயல் இயக்குநர் அருணா செல்வராஜ் தலைமை தாங்கினார். முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன் அனைவரையும் வரவேற்றார். இயக்குநர் - உயர்கல்வி அரசுபரமேசுவரன் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு அழைப்பாளர்களாக நாமக்கல் நகர காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளர் கே. சங்கரபாண்டியன், துணை காவல் ஆய்வாளர் பி. சங்கீதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் மற்றும் தனியார்மயமாக்கல் காரணமாக தொழில்நுட்ப வளர்ச்சி பெருகிவிட்டது. இதனை நாம் தவிர்க்க முடியாது. சைபர் கிரைம் என்னும் இணைய வழி குற்றங்கள் ஆடவரை விட மகளிரையே அதிகம் பாதிக்கிறது. தற்போது மகளிர் அதிகமானோர் தொழில்நுட்ப நிறுவனங்களில் பணிபுரிகிறார்கள். அவர்களின் அன்றாடப் பணி பெரும்பாலும் கணினியுடன் இணைந்துள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சி பெருகப்பெருக மகளிர்க்கு எதிராக குற்றங்களும் அதிகரித்து வருகின்றன. பெண்களை ஆபாசமாக படம்பிடித்து அதனை இணைய வழியில் வெளியிடுவது, அவர்களை மிரட்டி உடல்ரீதியாக, மனரீதியாக பயமுறுத்த வைப்பது, பணம் பறிப்பது, இணையதளத்தினை முடக்குவது, அவற்றை சமூக வலைத்தளங்களில் பதிவிடுவது போன்றவை அதிகரித்து வருகிறது. இதனால் பாதிப்படைந்த மகளிர் மனம் வருந்த வேண்டியதில்லை.

இதற்கென தனி உதவி அலைபேசி எண்ணான 1930 —னை மகளிர் எப்போது வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளலாம் என்றனர். மகளிர் எப்போதும் தைரியமாக இருக்க வேண்டும். அப்போது தான் எந்தவிதமாக பிரச்சனைகளையும் எதிர் கொள்ள முடியும் என்று இந்நிகழ்வில் குறிப்பிட்டனர். இக்கருத்தரங்கில் நாமக்கல் காவல் நிலைய தலைமைக் காவலர் ஆர். மணிவண்ணன், பேராசிரியப் பெருமக்கள் ஆர். சாவித்திரி, எம். சசிகலா, எஸ். ஜெயமதி, எஸ். பூர்ணிமா உட்பட ஏறத்தாழ 200 மாணவியர் பங்கேற்றனர்.

கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே. செங்கோடன் மற்றும் செயலர் கே. நல்லுசாமி குறிப்பிடுகையில் மகளிர மேம்பாடு அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் கல்லூரியில் போதிய இடைவெளியில் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருவதாக கூறினர்.

Principal,
Trinity College for Women (Arts & Science),
Namakkal - 637 002.